# *புனித முடியப்பர் (-36)*

இவர் நம் ஆண்டவர் அனுப்பிய எழுபத்திரண்டு சீடர்களில் ஒருவர். ஆண்டவர் பரலோகத்துக்குச் சென்ற பின் விசுவாசிகளுக்குப் பணிவிடை செய்வதற்காக ஏழு துணைத் தொண்டர்களை ஏற்படுத்தினார்கள். அவர்களில் முடியப்பர் ஒருவர். இவர் விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்து விளங்கியமையால் இவருக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர் அருளும் ஆற்றலும் நிறைந்தவராய் மக்களிடையே மாபெரும் அற்புதங்களையும் அருங்குறிகளையும் செய்து வந்தார். யூதர்களில் பலர் அவரோடு தர்க்கம் செய்யக் கிழம்பினர். ஆனால் அவரது ஞானத்தையும் அவர் வழியாய்ப் பேசிய பரிசுத்த ஆவியையும் அவர்கள் எதிர்த்து நிற்க முடியவில்லை. அவரைப் பிடித்து இழுத்து யூதர்களின தலைமைச் சங்கத்துக்குக் கொண்டு வந்தார்கள். அதில் 12 நடுவர்கள் உண்டு. இவர் மேயீசனுக்கும் கடவுளுக்கும் விரோதமாக தேவதூஷணம் சொல்வதாக குற்றம் சாட்டினார். முடியப்பரோ பிரதான குருக்களைக் கடிந்து கொண்டார். அவர்கள் கன்னெஞ்சராய் பரிசுத்த ஆவியை எதிர்த்து நிற்பதாகவும் கடவுளுடைய நீதிமானைக் கொலை செய்ததாகவும் குற்றம் சாட்டினர். அவர்கள் கோபங்கொண்டு இவர் மேல் பாய்ந்து பட்டணத்துக்கு வெளியே இழுத்துப்போய் இவரைக் கல்லால் எறிந்து கொன்றார்கள். இவரோ, “ஆண்டவராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக் கொள்ளும்” என்று வேண்டிக் கொண்டார். பின் முழந்தாளிட்டு உரத்த குரலில், “ஆண்டவரே, இப்பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்” என்று சொல்லி உயிர் துறந்தார்.

**சிந்தனை:**

இவர் தம்மைக் கொன்றவர்களை மன்னித்து அவர்களுக்காக மன்றாடியது வீண் போகவில்லை. இவரது கொலைக்கு உடந்தையாக இருந்த சவுல் மனந்திரும்பினார்.

**செபம்:**

ஆண்டவரே, எங்களுக்குத் தீமை செய்கிறவர்களை மன்னித்து அவர்களுக்காக மன்றாடும் மனதை எங்கள் அனைவருக்கும் தாரும்.